RNI-N0: TNTAM/2021/83936




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in
DAILY EVENING
மாலை நாளிதழ்
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 246 | செப்டம்பர் 10, 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# ‘மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி’ தவெக அணியின் அதிகாரப்பூர்வ பெயர் அறிவிப்பு

சென்னை: செப்.10-

தவெக தலைமையிலான புதிய கூட்டணிக்கு மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கடந்த சட்டமன்ற தேர்தலில் தனித்து களம் கண்ட தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்றது. இருப்பினும் ஆட்சி அமைக்க தேவையான பெரும்பான்மை இல்லாத காரணத்தினால், தவெக ஆட்சி அமைப்பதற்கு மற்ற கட்சியை நாட வேண்டிய சூழல் ஏற்பட்டது. அந்த சூழலில் திமுக கூட்டணியில் அங்கம் வகித்திருந்த காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவுடன் தவெக தலைமையில் ஆட்சி அமைக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சிகளை தவிர மற்ற கட்சிகள் தவெக அமைச்சரவையிலும் பங்கேற்றன.

இந்த சூழலில் தவெக தலைமையில் வலுவான புதிய கூட்டணியை உருவாக்கும் நடவடிக்கையாக கடந்த ஜூலை மாதம் தவெக ஆதரவு கட்சிகளின் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், மதிமுக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் பங்கேற்றன. அரசுக்கு தாங்கள் வெளியில் இருந்து ஆதரவு தெரிவிப்பதாக கூறி இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்த கூட்டத்தை புறக்கணித்தன.



இந்த சூழலில் தவெக ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு தெரிவிக்கும் கட்சிகளுடனான இரண்டாம் கட்ட ஆலோசனை கூட்டம் இன்று பனையூரில் உள்ள தவெக கட்சி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. முதல்வர் தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி, மதிமுக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியினர் பங்கேற்றனர். கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தவெக சார்பில் அழைப்பு விடுத்த போதிலும், அவர்கள் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இன்று நடைபெற்ற கூட்டத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் கட்சியின் மாநில தலைவர் மாணிக்கம் தாகூர், நாடாளுமன்ற உறுப்பினர் பிரவீன் சக்கரவர்த்தி, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் தாரகை கட்பட், மதிமுக சார்பில் பொதுச் செயலாளர் வைகோ, நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சார்பில், ஐ.யூ.எம்.எல் தலைவர் காதர் மொய்தீன், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஷாஜகான், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் கட்சியின் தலைவர் திருமாவளவன், எம்.பி ரவிக்குமார், சிந்தனைச் செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் முதலமைச்சர் ஜோசப் விஜய் பாரம்பரிய முறையில் வேஷ்டி, சட்டை அணிந்து கூட்டத்தில் பங்கேற்றார். இக்கூட்டம் சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கு மேலாக நடைபெற்றது. இக்கூட்டத்தின் முடிவில் தவெக தலைமையிலான கூட்டணிக்கு, ’மதசார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. கூட்டணி கட்சியின் தலைவராக முதல்வர் விஜய் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.





## அனுமதியின்றி கிராவல் மண் அள்ளியதாக 3 வாகனங்கள் பறிமுதல்

காரைக்குடி செப்-10

சிவகங்கை மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலர்கள் இன்று 09.09.2026 காரைக்குடி வட்டம், பள்ளத்தூர் குரூப் வடகுடி கண்மாய் பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, உரிய அனுமதியின்றி கிட்டாச்சி மற்றும் JCB இயந்திரங்களின் மூலம் கிராவல் மண் ஏற்றப்பட்டதாக கூறப்படும் டாரஸ் லாரி TN-59-CS-3039 உள்ளிட்ட மூன்று வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட வாகனங்கள் பள்ளத்தூர் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன. மேலும், சம்பந்தப்பட்ட மூன்று வாகனங்கள் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி புவியியல் மற்றும் சுரங்கத்துறை சார்பில் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

## தனியார் பள்ளிகளில் நீண்ட நேர வகுப்புகள்: பள்ளிக்கல்வித்துறை நடவடிக்கை எடுக்க கோரிக்கை

மானாமதுரை. செப்.10

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை உள்ளிட்ட பகுதிகளில் செயல்படும் சில தனியார் பள்ளிகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அதிக நேர பள்ளிச் செயல்பாடுகள் கட்டாயப்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை, சுமார் 12 மணி நேரம் பள்ளியில் இருக்க வேண்டிய நிலை காணப்படுவதாகவும், பல சனிக்கிழமைகளிலும் பள்ளிக்கு வருமாறு கூறப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேலும், சில விடுமுறை மற்றும் பண்டிகை நாட்களிலும் போதிய விடுமுறை வழங்கப்படுவதில்லை என குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கு மன அழுத்தம், உடல் சோர்வு மற்றும் மன வேதனை ஏற்படுவதாகவும், இது நீடித்தால் எதிர்மறையான விளைவுகள் ஏற்படக்கூடும் எனவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுப் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்ற மாணவிகளும் மருத்துவப் படிப்புக்கான தகுதித் தேர்வுகளில் வெற்றி பெற்று வருவது குறிப்பிடத்தக்கது எனவும், கல்வி என்பது வணிக நோக்கத்தை விட மாணவர்களின் உடல் மற்றும் மனநலனை முன்னிலைப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே, தனியார் பள்ளிகளில் வகுப்பு நேரம், வார விடுமுறை மற்றும் பண்டிகை விடுமுறைகள் தொடர்பான நடைமுறைகளை பள்ளிக்கல்வித்துறை ஆய்வு செய்து, விதிமீறல்கள் இருப்பின் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் கல்லூரியில் ஆசிரியர் தின விழா

காரைக்குடி, செப்-10

சிவகங்கை மாவட்டம் அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் கல்லூரியில் மாணவர் ஆசிரியர் மன்ற உறுப்பினர்கள் சார்பில் ஆசிரியர் தின விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் முதலாமாண்டு மாணவர் பயிற்சி ஆசிரியர் அ. ஜெசி வரவேற்புரை வழங்கினார். கல்லூரியின் இணைப் பேராசிரியரும் முதல்வர் (பொறுப்பு) டாக்டர் ஜெ. மெர்லின் சசிகலா தலைமை வகித்து உரையாற்றினார். அவர் தனது தலைமையுரையில், டிஜிட்டல் காலத்தில் ஆசிரியர் மாணவர் உறவின் முக்கியத்துவம், மதிப்புகள் சார்ந்த கல்வி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் மனிதநேயத்தை இணைக்கும் ஆசிரியர்களின் பொறுப்பு குறித்து வலியுறுத்தினார்.





சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற DIET முதல்வர் த. தனுஷ்கோடி கலந்து கொண்டு, டிஜிட்டல் யுகத்தில் ஆசிரியர்களின் பங்கு, கல்வித் துறையில் ஏற்பட்டு வரும் புதிய மாற்றங்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து சிறப்புரையாற்றினார். விழாவில் கல்லூரி ஆசிரியர்களுக்கு மாணவர் ஆசிரியர்கள் சார்பில் பாராட்டு மற்றும் கௌரவிப்பு வழங்கப்பட்டது. தொடர்ந்து மாணவர் ஆசிரியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறுதியாக முதலாமாண்டு மாணவர் ஆசிரியர் மன்ற உறுப்பினர் அ. மஞ்சு நன்றியுரை வழங்கினார்.

## பட்டினப்பாக்கத்தில் அமைகிறது புதிய தலைமைச்செயலகம்: அரசாணை வெளியீடு

சென்னை, செப்.10-

20 லட்சம் சதுர அடியில் ரூ.1,200 கோடியில் நவீன வசதிகளுடன் சட்டப்பேரவை மற்றும் தலைமைச் செயலகம் அமைப்பதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது

புதிய தலைமைச்செயலகம்

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் சென்னையில் கட்டப்பட்ட புனித ஜார்ஜ் கோட்டையில் தமிழக அரசின் தலைமைச் செயலகம் செயப்பட்டு வருகிறது. தற்போது, ராணுவ கட்டுப்பாட்டில் உள்ள இந்த கட்டிடத்தில்தான் சட்டமன்ற கூட்ட அரங்கமும் உள்ளது. இதற்காக, மாதந்தோறும் ராணுவத்திற்கு தமிழக அரசு குத்தகை தொகை கட்டி வருகிறது.

இந்த நிலையில், தமிழகத்தில் புதிதாக ஆட்சி பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு, ரூ.1,200 கோடியில் புதிய தலைமைச் செயலகம் கட்ட முடிவு செய்தது. இதற்கான அறிவிப்பை சமீபத்தில் முதல்-அமைச்சர் ஜோசப் விஜய் சட்டசபையில் வெளியிட்டார். ஆனால், அப்போது எந்த இடத்தில் புதிய தலைமைச்செயலகம் அமையப்போகிறது என்பதை அவர் தெரிவிக்கவில்லை.



பட்டினப்பாக்கம்

இந்த நிலையில், புதிய தலைமைச்செயலகம் கட்டுவதற்கு பட்டினப்பாக்கம், கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் நந்தம்பாக்கத்தில் உள்ள பின் டெக் சிட்டிக்கு எதிரே உள்ள நிலம் ஆகிய 3 இடங்கள் தேர்வு செய்யப்பட்டன.

தற்போது, பட்டினப்பாக்கம் சாந்தோம் பிரதான சாலையில் இருந்து அணுகு சாலையில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் புதிய தலைமைச்செயலகம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி இருந்தன.

மார்க்கெட் மதிப்பு ரூ.2,047 கோடி

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான இந்த இடம் 21.37 ஏக்கர் பரப்பளவை கொண்டது. இந்த பகுதியில் தற்போதைய மார்க்கெட் மதிப்பு சதுரடிக்கு ரூ.22 ஆயிரம் ஆகும். அதை வைத்து கணக்கிடும்போது, இடத்தின் மொத்த மதிப்பு சுமார் ரூ.2,047 கோடியாக உள்ளது. இந்த இடத்தை பொதுத்துறை பயன்பாட்டிற்கு வழங்குவதாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தெரிவித்திருந்தது.

அரசாணை

இந்நிலையில் சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமை செயலகம் அமைப்பதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு இன்று (09.09.2026) வெளியிட்டுள்ளது. இதற்காக பட்டினப்பாக்கத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான 21.37 ஏக்கர் பரப்பளவில் நிலங்களை அரசு அடையாளம் கண்டுள்ளது. இதன்படி அங்கு ரூ.1,200 கோடி மதிப்பில் அனைத்து நவீன வசதிகளுடன் புதிய தலைமை செயலகம் அமைய உள்ளது.

சட்டமன்றம் மற்றும் பல்வேறு அரசுத் துறைகளை ஒரே ஒருங்கிணைந்த வளாகத்தின் கீழ் கொண்டு வருவதே இத்திட்டத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்துக்கு 6,000 கன அடி நீர் திறக்க கர்நாடகாவுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவு

புதுடெல்லி, செப்.10-

காவிரி மேலாண்மை ஆணையத்தின் 56-வது கூட்டம் அதன் தலைவர் எஸ்.கே.ஹல்தர் தலைமையில் நேற்று டெல்லியில் நடைபெற்றது. அதில் தமிழகம், கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் நீர்வளத் துறை அதிகாரிகள் காணொலி வாயிலாக பங்கேற்றனர்.

பின்னர் தமிழக அரசின் சார்பில், “காவிரி நீர் பங்கீட்டு வழக்கில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்படி வறட்சி காலத்தில் செப்டம்பர் மாதத்தில் தமிழகத்துக்கு 7.8 டிஎம்சி தண்ணீரை திறந்துவிட வேண்டும்” என வலியுறுத்தப்பட்டது.

இதற்கு ஆட்சேபம் தெரிவித்த கர்நாடக அரசு, அம்மாநிலத்தில் பருவமழை சரியாக பெய்யவில்லை. எனவே நீரை திறக்க முடியாத நிலை நிலவுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதனை ஏற்க மறுத்த காவிரி ஆணைய தலைவர் எஸ்.கே.ஹல்தர், “தமிழகத்துக்கு அடுத்த 15 நாட்களுக்கு வினாடிக்கு 6 ஆயிரம் கன அடி நீரை கர்நாடகா காவிரியில் திறந்துவிட வேண்டும். இதனை செப்டம்பர் 9-ம் தேதி(இன்று) முதல் பிலிகுண்டுலு சோதனை நிலையத்தில் உறுதிப்படுத்த வேண்டும்” என உத்தரவிட்டார்.

# குன்னூர் வெலிங்டன் கன்டோன்மென்ட் போர்டில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

நீலகிரி, செப்.10–

நீலகிரி மாவட்டம் வெலிங்டன் கன்டோன்மென்ட் போர்டு சார்பில் திடக்கழிவு மேலாண்மை (SWM) விதிகள் 2026 குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி சிங்காரத்தோப்பு சமுதாய கூடத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில், கன்டோன்மென்ட் முதன்மை நிர்வாக அதிகாரி கிண்டியா வழிகாட்டுதலின்படி, பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு திடக்கழிவுகளை முறையாக கையாளுதல், கழிவுகளை உருவாகும் இடத்திலேயே பிரித்துச் சேகரித்தல் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் அவசியம் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.



குறிப்பாக ஈரக் கழிவு, உலர் கழிவு, சானிட்டரி கழிவு மற்றும் சிறப்பு பராமரிப்பு கழிவு என கழிவுகளை தனித்தனியாக பிரித்து வழங்க வேண்டும் என்றும், வீடுகள் மற்றும் நிறுவனங்களில் இருந்து உருவாகும் கழிவுகளை பொறுப்புடன் கையாள வேண்டும் என்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026-ன் முக்கிய அம்சங்கள், கழிவு உருவாக்குபவர்களின் கடமைகள், கன்டோன்மென்ட் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு மற்றும் அதிக அளவில் கழிவு உருவாக்கும் நிறுவனங்களின் பொறுப்புகள் குறித்தும் விளக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் தலைமை கன்டோன்மென்ட் சுகாதார மேற்பார்வையாளர் ராதாகிருஷ்ணன், சூப்பிரண்டு (OS) செந்தில், நியமன உறுப்பினர் ஷீபா சுகாதார ஆய்வாளர்கள் பழனிசாமி பூரணி தலைமையில் முன்னாள் உறுப்பினர் ஸ்ரீனிவாசன், செபாஸ்டின் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், ஏராளமான பொதுமக்கள், மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

“இன்றே கழிவுகளை முறையாகப் பிரிப்போம்; தூய்மையான நாளையை உருவாக்குவோம்” என்ற நோக்கத்துடன் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தூய்மையான வெலிங்டனை கன்டோன்மென்ட் பகுதியை உருவாக்குவதற்கான முக்கிய விழிப்புணர்வு நடவடிக்கையாக அமைந்தது.



# செங்குன்றம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இரு நாள் பகல் நேர பூப்பந்து கிரிக்கெட் போட்டி

மாதவரம், செப்.10–

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செங்குன்றம் பேரூர் கழகத்தின் ஜென்ஸ்திமுக சார்பில் இரு நாள் பகல் நேர பூப்பந்து கிரிக்கெட் போட்டி எல்.ஆர். மணிகண்டன், ஆர்.வருண் ஆகியோர் ஏற்பாட்டில் செங்குன்றம் ஓஆர்ஜிஎன் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு திடலில் நடைபெற்றது. செங்குன்றம் பேரூர் கழக பொறுப்பாளர் ஆர்.டி. சுதாகர், சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் ஆகியோர் போட்டியில் பங்கேற்று முதல் பரிசு பெற்ற சிவா பிரண்ட்ஸ் அணிக்கு ரூ. 20,000மும், இரண்டாம் இடம் பெற்ற ஹெச்சிசி அணிக்கு ரூ. 15,000மும், மூன்றாம் இடம் பெற்ற பிஎஸ்கே அணிக்கு ரூ. 10,000மும், நான்காம் இடம் பெற்ற ஸ்ட்ரீட் கிரிக்கெட் அணிக்கு ரூ. 5,000மும் பரிசுத் தொகையையும் கோப்பையையும் வழங்கினர். சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு கோப்பை மற்றும் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இதில் செங்குன்றம் பேரூர் கழக துணை செயலாளர்கள் கபிலன், அன்பு, 10வது வார்டு செயலாளர் மதிவாணன், வழக்கறிஞர் அறிவுநிதி, 15வது வார்டு செயலாளர் அப்துல்சமது, இளைஞரணி அமைப்பாளர்கள் லெனின்குமார், புழல் யுவராஜ், மணலி ஸ்டாலின், துணை அமைப்பாளர்கள் ஷாம்கார்த்திக், கருப்பு ஸ்ரீதர், கிருஷ்ணமூர்த்தி, ரவீந்திரன், மணிகண்டன், சாந்தகுமார், குறளரசன், ரூபேஷ், வார்டு அமைப்பாளர்கள் நந்தகுமார், பிரபாகரன், நரேஷ், யாசின், சித்தர், அரிஷ், நித்தீஷ், வினோத், ஐசக், உள்ளிட்ட இளைஞரணி நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# ஸ்ரீ சிவசக்தி செல்வ விநாயகர் ஆலயத்தில் பாலாபிஷேகம் நிகழ்ச்சி

மாதவரம், செப்.10–

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி சேரன் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சிவசக்தி செல்வ விநாயகர் ஆலயத்தில் 32-ம் ஆண்டு சதுர்த்தி திருவிழாவை முன்னிட்டு பாலாபிஷேகம் நிகழ்ச்சி ஆலய தர்மகர்த்தா ஆர். சக்திமோகன் ஏற்பாட்டில் மற்றும் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் உலகமக்கள் நன்மைகள் வேண்டி செங்குன்றம் பராசக்தி வீரம்மாகாளி அம்மன் ஆலயத்திலிருந்து மேளதாளத்துடன் தாய்மார்கள் தங்களது சிரசியில் பால்குடம் சுமந்துவந்து பின்னர் அருள்மிகு ஸ்ரீ சிவசக்தி செல்வ விநாயகருக்கு பாலாபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இவ்விழாவிற்கு ஆலய நிர்வாகிகள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.



# வர்த்தகப் போர் தீவிரம்; கனடா பொருட்களுக்கு அமெரிக்கா தடை

## அதிபர் டிரம்ப் அதிரடி

வாஷிங்டன், செப்.10–

அமெரிக்கா – கனடா இடையே வர்த்தகப் போர் தீவிரமடைந்துள்ள நிலையில், கனடாவிலிருந்து பால் பொருட்கள், சில மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பெரும்பாலான மதுபானங்களை இறக்குமதி செய்ய அமெரிக்கா தடை விதித்துள்ளது.

அமெரிக்க அதிபரான் டிரம்ப் இதற்கான நிர்வாக உத்தரவுகளில் கையெழுத்திட்டுள்ளார். இந்த இறக்குமதி தடைகள் வரும் செப்டம்பர் 29, 2026 முதல் அமலுக்கு வரவுள்ளதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது. முன்னதாக, இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக பேச்சுவார்த்தைகள் முறிந்ததைத் தொடர்ந்து அமெரிக்கா விதித்த வரிகளுக்குப் பதிலடியாக, 20 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள அமெரிக்கப் பொருட்கள் மீது கனடா புதிய வரிகளை விதித்தது. இந்த புதிய வரிகள் அமலுக்கு வந்த சில மணி நேரங்களிலேயே அமெரிக்கா மேற்கண்ட தடை அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது.

கனடாவின் பால் பொருட்களான வே புரோட்டீன், மோலாசஸ் (molasses), பெரும்பாலான மதுபானங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்/மோபெட் வாகனங்கள் அமெரிக்காவின் சமீபத்திய இந்தத் தடையில் அடங்கும். மேலும், சில பிரபலமான கனேடிய சீஸ் வகைகளுக்கு 50 சதவீத கூடுதல் வரியும் விதிக்கப்பட்டுள்ளது.



# ஒட்டன்சத்திரம் அருகே நீரோடையை அடைத்து சட்டவிரோதமாக பாதை அமைப்பு

## தனியார் காற்றாலை நிறுவனம் மீது புகார்!

திண்டுக்கல், செப்.10–

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே கள்ளிமந்தையம் - பழனி நான்கு வழிச்சாலையில், மழைநீர் செல்லும் முக்கிய நீரோடையை தனியார் காற்றாலை நிறுவனம் ஒன்று மண் கொட்டி முற்றிலுமாக அடைத்து, சட்டவிரோதமாக பாதை அமைத்து வருவதாக புகார் எழுந்துள்ளது.

ஒட்டன்சத்திரம் அருகே கள்ளிமந்தையம் பகுதியில் பழனி செல்லும் நான்கு வழிச்சாலையின் தென்புறம் அமைந்துள்ள நீரோடை, அப்பகுதியின் முக்கிய மழைநீர் வடிகாலாக உள்ளது. இந்த நீரோடையை தனியார் காற்றாலை நிறுவனம் மண் கொட்டி அடைத்து, கனரக வாகனங்கள் செல்ல பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

இதனால் வரும் மழைக்காலங்களில் காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டு சாலைகள் மற்றும் சுற்றியுள்ள விவசாய நிலங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகும் அபாயம் உள்ளது.

மேலும் உரிய அரசு ஆவணங்கள் மற்றும் அனுமதி இன்றி இந்த பாதை அமைக்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனைக் கண்டித்து அப்பகுதி விவசாயிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் காவல் நிலையத்தில் புகார் அளித்து, சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனம் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தேனி மாவட்டம் முதலமைச்சர் கோப்பை - 2026 க்கான விளையாட்டுப்போட்டிகளை துவக்கி வைத்து, விளையாட்டு வீரர்கள் ஆர்வமுடன் பங்கேற்று பயன்பெற வேண்டும்

## மரு.இரா.வைத்திநாதன், வேண்டுகோள்!

தேனி, செப்.10–

தேனி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் முதலமைச்சர் கோப்பை 2026-க்கான மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர்.க.சபரி ஐங்கரன் முன்னிலையில் துவக்கி வைத்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். மேலும், தமிழ்நாட்டில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் என அனைவரும் பங்கேற்கும் வகையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டு வெவ்வேறு புதிய விளையாட்டுகள் சேர்க்கப்பட்டு 5 பிரிவுகளில் மாவட்ட அளவில் 17 விளையாட்டுப் போட்டிகள், மண்டல அளவில் 7 விளையாட்டுப் போட்டிகள் மற்றும் மாநில அளவில் 37 வகையான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளது. தேனி மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க மொத்தம் 52,000 நபர்கள் பதிவு செய்துள்ளனர். கடந்த ஆண்டைவிட 9,285 நபர்கள் கூடுதலாக பதிவு செய்துள்ளார்கள்.



முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க மாவட்ட அளவிலான தடகளம், சிலம்பம், கைப்பந்து, கையுந்து பந்து, கால்பந்து, கபடி, கோ-கோ, கூடைப்பந்து, வளைகோல் பந்து, நீச்சல், ஓட்டப்பந்தயம், செஸ், கேரம், கிரிக்கெட் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் (09.09.2026) முதல் 25.09.2026 வரை தேனி மாவட்ட விளையாட்டு மைதானம் மற்றும் ஆயுதப்படை காவல் மைதானத்தில் (கிரிக்கெட், கூடைப்பந்து) நடைபெறவுள்ளது.

அதனடிப்படையில் இன்றைய தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்து, போட்டிகளில் வெற்றிபெற மாணவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தார்.

மாவட்ட அளவில் நடைபெறும் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப்போட்டிகளில் பங்கு பெற்று வெற்றி பெறுபவர்கள் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்வார்கள்.

மாவட்ட மற்றும் மண்டல அளவிலான போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு (தனிநபர் மற்றும் குழுப்போட்டிகள்) முதல் பரிசாக தலா ரூ.3000/-, இரண்டாம் பரிசாக தலா ரூ.2000/-, மூன்றாம் பரிசாக தலா ரூ.1000/- வழங்கப்படும். மாநில அளவிலான தனிநபர் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.1 இலட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.75,000/- மூன்றாம் பரிசாக ரூ.50,000/- மற்றும் குழுப்போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.75,000/-, இரண்டாம் பரிசாக ரூ.50,000/- மூன்றாம் பரிசாக ரூ.25,000/- வழங்கப்படும். மாநில அளவில் வெற்றி பெறும் அணிகளுக்கு பரிசுத்தொகையுடன் முதலமைச்சர் கோப்பை வழங்கப்படும்.

மேலும், மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்கும் பள்ளி, கல்லூரி மாணவர்கள் Bonafide Certificate அல்லது School/College ID card, மாற்றுத்திறனாளிகள் எனில் மாற்றுத்திறனாளி அடையாள அட்டை (ID card), பொதுப் பிரிவில் கலந்து கொள்ள உள்ள வீரர் வீராங்கனைகள் இருப்பிடச் சான்றிதழ், அரசு ஊழியர்கள் தங்களுக்கான அலுவலக அடையாள அட்டை (Department ID card), மேலும் போட்டிகளில் பங்கேற்க உள்ள அனைவரும் தங்களின் ஆதார் கார்டு மற்றும் வங்கி கணக்கு புத்தக நகலினை கட்டாயம் கொண்டு வருதல் வேண்டும். மேலும், கூடுதல் தகவலுக்கு மாவட்ட விளையாட்டு அலுவலகத்தை நேரிலோ அல்லது 04546-253090 அல்லது 74017 03505 என்ற தொலைப்பேசி எண்ணிலோ (வேலை நேரங்களில்) தொடர்பு கொள்ளலாம்.

முன்னதாக, விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் ஜோதியினை ஏற்றி வந்து மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கியதுடன், அனைத்து விளையாட்டு வீரர்களும் விளையாட்டு போட்டிகளில் நேர்மையாக பங்கெடுத்துக்கொள்கிறோம் என உறுதி மொழி ஏற்றக்கொண்டனர் அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப்போட்டிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் குபேந்திரன், முதன்மை கல்வி அலுவலர் குபேந்திரன், மாவட்ட விளையாட்டு அலுவலர் .சிவக்குமார் மற்றும் விளையாட்டு ஆசிரியர்கள், விளையாட்டு நடுவர்கள், விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வடகிழக்கு பருவமழை -2026 ஐ முன்னிட்டு

# முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுக்கான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

திருப்பத்தூர், செப்.10–

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வடகிழக்கு பருவமழை -2026 ஐ முன்னிட்டு, மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பேரிடர் பாதுகாப்பு முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுக்கான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,, தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.பாலசுப்ரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சௌ.தமிழரசி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் தமிழ்நங்கை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இணை இயக்குநர் மரு. ஞானமீனாட்சி, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) முருகேசன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷண குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் தணிகாசலம், வேளாண்மை இணை இயக்குநர் மணி, வருவாய் கோட்டாட்சியர்கள் சிவக்குமார் (வாணியம்பாடி), வரதராஜன் (திருப்பத்தூர்), வாணியம்பாடி துணைக்காவல் கண்காணிப்பாளர் மகாலட்சுமி, உதவி இயக்குநர் ஊராட்சிகள் (தெற்கு) மகாதேவன் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# செப்.11-ல் பிரதமர் மோடி, ரஷ்ய அதிபர் புதின் சந்திப்பு

புதுடெல்லி, செப்.10-

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் வரும் 11-ம் தேதி டெல்லியில் சந்தித்துப் பேச உள்ளனர். அப்போது இந்திய விமானப் படைக்கு ரஷ்யாவின் எஸ்யு 57 போர் விமானங்களை வாங்குவது குறித்து இரு தலைவர்களும் முக்கிய ஆலோசனை நடத்த உள்ளனர் என்று ரஷ்ய அதிபர் மாளிகை செய்தித் தொடர்பாளர் திமித்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

பிரிக்ஸ் கூட்டமைப்பின் உச்சி மாநாடு வரும் 12, 13-ம் தேதிகளில் டெல்லியில் நடைபெற உள்ளது. இதில் பங்கேற்க ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் வரும் 11-ம் தேதியே டெல்லி வருகிறார். அன்றைய தினம் பிரதமர் நரேந்திர மோடியும் அதிபர் புதினும் தனியாக சந்தித்துப் பேச ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த பேச்சுவார்த்தையின்போது பாதுகாப்பு, வர்த்தகம், எரிசக்தி, தொழில்நுட்பம், அணு சக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகள் குறித்து



முக்கிய ஆலோசனைகள் நடத்தப்பட உள்ளன.

இது குறித்து ரஷ்ய அதிபர் மாளிகை செய்தித் தொடர்பாளர் திமித்ரி பெஸ்கோவ் காணொலி வாயிலாக இந்திய நிருபர்களிடம் கூறியதாவது: அதிபர் புதினுக்கும் பிரதமர் மோடிக்கும் இடையே மிக நெருங்கிய நட்புறவு நீடிக்கிறது. செப்டம்பர் 11-ம் தேதி டெல்லியில் இரு தலைவர்களும் சந்தித்து பேச உள்ளனர். அப்போது இருதரப்பு மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்துவார்கள்.

எரிசக்தி, அணு சக்தி, பாதுகாப்பு, விண்வெளி, கல்வி உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுகின்றன. கூடங்குளம் அணு மின் நிலையத்தை விரிவுபடுத்த ரஷ்யா தொடர்ந்து உதவிகளை வழங்கும். ரஷ்யாவின் உதவியுடன் இந்தியாவில் புதிதாக ஓர் அணு மின் நிலையத்தை தொடங்குவது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது.

ரஷ்யாவும் இந்தியாவும் இணைந்து பிரம்மோஸ் ஏவுகணைகளை தயாரித்து வருகின்றன. இந்த ஏவுகணை சர்வதேச அளவில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. பிரிக்ஸ் உச்சி மாநாட்டின்போது இந்திய விமானப் படைக்காக ரஷ்யாவின் எஸ்.யு.57 ரக போர் விமானங்களை வாங்குவது குறித்து பிரதமர் மோடியும் அதிபர் புதினும் முக்கிய ஆலோசனை நடத்த உள்ளனர். இந்த போர் விமானத்தின் தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு வழங்குவது குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

இந்தியாவுக்கு வழங்க வேண்டிய ரஷ்யாவின் எஸ்-400 ஏவுகணைகள் குறித்தும் அதிபர் புதினும் பிரதமர் மோடியும் ஆலோசனை நடத்துவார்கள். ரஷ்யா அளித்த வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற்றும். ரஷ்யாவின் அதிநவீன பாதுகாப்பு தொழில்நுட்பங்களை இந்தியாவுக்கு வழங்க தயாராக உள்ளோம். ரஷ்ய ராணுவத்தில் பணியாற்றும் இந்தியர்களை கண்டறிந்து, அவர்களை திருப்பி அனுப்புவோம்.

**ரூபாய் பணப் பரிமாற்ற சிக்கல்**

ரஷ்யா, இந்தியா இடையிலான ரூபாய் பணப் பரிமாற்றத்தில் சில சிக்கல்கள் உள்ளன. இவை படிப்படியாக நீக்கப்படும். ரஷ்யாவுக்கான இந்திய பொருட்களின் ஏற்றுமதி கணிசமாக அதிகரித்து வருகிறது. இரு நாடுகள் இடையே விமானப் போக்குவரத்தை அதிகரிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. ரஷ்யாவிடம் இருந்து இந்தியாவுக்கு தொடர்ச்சியாக கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இது தொடர்பான புள்ளி விவரங்களை அளிக்க முடியாது. ஆனால் ஒவ்வொரு மாதமும் இந்தியாவுக்கான கச்சா எண்ணெய் ஏற்றுமதி புதிய உச்சத்தை தொட்டு வருகிறது.

**உக்ரைன் போர்**

உக்ரைன் போர் தொடர்பாக ரஷ்யா, அமெரிக்கா இடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடியிடம் அதிபர் புதின் முழுமையாக எடுத்துரைப்பார். இவ்வாறு திமித்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

# மேகமலை ஆக்கிரமிப்புகளை அகற்றும் விவகாரம்: விசாரணையை செப்.22-க்கு தள்ளிவைத்தது உச்ச நீதிமன்றம்

சென்னை, செப்.10-

மேகமலை புலிகள் சரணாலயம் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றுவது தொடர்பான வழக்கின் விசாரணையை செப்.22-க்கு உச்சநீதிமன்றம் தள்ளிவைத்தது.

மேகமலை மற்றும் அதனை சுற்றியுள்ள பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி உச்ச நீதிமன்றம் தானாக முன்வந்து பதிந்த வழக்கு, மாஞ்சோலையில் வசித்து வரும் மக்களுக்கு மாற்று ஏற்பாடு செய்யக்கோரி ஜான் கென்னடி என்பவர் தொடர்ந்த வழக்கு ஆகியவை உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தன.

அப்போது, இந்த வழக்கில் நீதிமன்றத்துக்கு



உதவுவதற்கு நியமனம் செய்யப்பட்ட வழக்கறிஞர் கே.பரமேஷ்வர் வேறு ஒரு வழக்கில் வாதிட்டு வருவதால் இந்த வழக்கை தள்ளிவைக்க வேண்டும் என கோரப்பட்டது.

இதைஏற்ற நீதிபதிகள் மேகமலை தொடர்பான வழக்கைசெப்.22-க்கு தள்ளிவைத்தனர். அப்போது, கே.பரமேஷ்வர் தரப்பு வழக்கறிஞர், மேகமலை வழக்கை அடுத்த வாரத்தில் விசாரணைக்கு எடுக்குமாறு கோரிக்கை வைத்தார். ஆனால் நீதிபதிகள், அடுத்த வாரம் வேறுபல வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட உள்ளதால் மேகமலை வழக்கை 22-ம் தேதியே விசாரணைக்கு எடுக்க முடியும் என திட்டவட்டமாக கூறினர்.

முன்னதாக கடந்த ஆகஸ்ட் மாதம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, மேகமலை புலிகள் சரணாலயம் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்ற வேண்டும். பஞ்சு தோட்டங்கள் முழுமையாக அப்புறப்படுத்தப்பட்ட வேண்டும்.

ஏனெனில் ஆக்கிரமிப்புக்கான மிக முக்கிய காரணமானவர்களே அந்தத் தோட்ட உரிமையாளர்கள் தான் எனவும், வன நிலங்களை ஆக்கிரமித்துள்ள யாராக இருந்தாலும் அவர்களின் கட்டிடங்களுக்கான மின்சாரம், நீர் இணைப்பு உள்ளிட்டவற்றை துண்டிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# வெவ்வேறு மதத்தினர் சேர்ந்து வாழ்வதை தடுக்க முடியாது உயர் நீதிமன்றம் கருத்து

மதுரை, செப்.10-

சிவகங்கையைச் சேர்ந்த மாரிமுத்து உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், மானாமதுரை தாயாபுரம் கிராமத்தில் கட்டப்பட்ட புதிய தேவாலய கட்டிடத்தை அகற்ற உத்தரவிட வேண்டும் எனக் கூறியிருந்தார்.

மனுவை நீதிபதிகள் தண்டபாணி, திலீப்குமார் அமர்வு விசாரித்தது. பின்னர் நீதிபதிகள், தேவாலயம் தனியார் பட்டா நிலத்தில் அமைந்துள்ளது. சுமார் 25 ஆண்டுகளாக சம்பந்தப்பட்ட இடத்தில் பிரார்த்தனைக் கூடம் இருந்து வந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மறுகட்டுமானத்துக்காக 2018 செப்டம்பரில் விண்ணப்பம் செய்யப்பட்டு, உள்ளாட்சி அமைப்பால் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதும் உறுதியாகிறது. தேவாலயத்துக்கும், முத்து மாரியம்மன் கோயிலுக்கும் இடையே 45 மீட்டர் தூரம் உள்ளது.

இப்பகுதியில் வசிக்கும் மக்கள் கடந்த 25 ஆண்டுகளாக இங்கு வழிபாடு செய்து வருகின்றனர். பிரார்த்தனை கூடம் இருப்பதில் தங்களுக்கு எவ்வித ஆட்சேபமும் இல்லை என மக்கள் தெரிவித்துள்ளனர்.

கட்டுமானம் அல்லது பிரார்த்தனைக் கூடத்தின் பயன்பாடு எந்த சட்ட விதிகளையும் மீறுவதாக ஆதாரம் இல்லை. வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த மக்கள் அமைதியாக இணைந்து வாழும் அரசியலமைப்புச் சட்ட உத்தரவாதத்தை, ஆதாரமற்ற அச்சத்தின் அடிப்படையில் கட்டுப்படுத்த முடியாது.

அதோடு, மனுதாரர் சம்பந்தப்பட்ட பகுதியில் வசிப்பவர் அல்ல. மாவட்ட ஆட்சியரின் உத்தரவில் சட்டவிரோதமோ, நடைமுறை குறைபாடோ ஏதுமில்லை. எனவே, மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என உத்தரவிட்டனர்.

# சட்ட விரோதமாக குடிநீர் உறிஞ்சும் 34 மின் மோட்டார்கள் பறிமுதல்: சென்னை குடிநீர் வாரியம் நடவடிக்கை

சென்னை, செப்.10-

தண்டையார்பேட்டை, அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், அடையாறு மற்றும் பெருங்குடி மண்டலங்களில் சட்ட விரோதமாக பொருத்தப்பட்டிருந்த 34 குடிநீர் உறிஞ்சும் மின் மோட்டார்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சென்னை குடிநீர் வாரியம் வெளியிட்ட அறிக்கை: குடிநீர் விநியோகத்தில் ஏற்படும் அழுத்தக் குறைபாடு தவிர்க்கப்பட்டு, அப்பகுதியில் உள்ள அனைத்து நுகர்வோருக்கும் சீரான மற்றும் சமமான குடிநீர் விநியோகம் உறுதி செய்யும் வகையில் மண்டலம் 1 முதல் 15 வரையிலான அனைத்து பகுதிகளிலும் சிறப்பு கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் ஆய்வு மேற்கொள்ளும்போது, குடிநீர் இணைப்புகள் மற்றும் பொது குழாய்களில் சட்டவிரோதமாக குடிநீர் உறிஞ்சும் மின் மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளது கண்டறியப்பட்டால் மின் மோட்டார்கள் பறிமுதல் செய்யப்படுவதோடு உரிய சட்டவிதிகளின் கீழ் கடும்




நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஏற்கெனவே பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் (செப்.7-ம் தேதி) சிறப்பு கண்காணிப்பு குழுவினர் ஆய்வு மேற்கொண்ட போது தண்டையார்பேட்டை மண்டலத்தில் எம்.கே.பி நகர், அம்பத்தூர் மண்டலத்தில் ஒ.டி பேருந்து நிலையம், முகப்பேர், அண்ணா நகர் மண்டலத்தில் சூளைமேடு, தேனாம்பேட்டை மண்டலத்தில் வள்ளுவர் கோட்டம், கிரீம்ஸ் ரோடு, டிரஸ்ட் புரம், கோடம்பாக்கம் மண்டலத்தில் எம்.ஜி.ஆர் நகர், அடையாறு மண்டலத்தில் தரமணி, பெருங்குடி மண்டலத்தில் கொட்டிவாக்கம், மற்றும் கந்தன்சாவடி ஆகிய இடங்களில் குடிநீர் குழாய்களில் சட்ட விரோதமாக குடிநீர் உறிஞ்சும் மின் மோட்டார்கள் பொருத்தப்பட்டிருந்தது கண்டறியப்பட்டு 34 மின்மோட்டார்கள் உடனடியாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கெனவே அடையாறு மண்டலத்தில் மட்டும் சட்ட விரோதமாக பொருத்தப்பட்டிருந்த 55 குடிநீர் உறிஞ்சும் மின்மோட்டார்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், இதுவரை 89 மின் மோட்டார்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன, மேற்கூறிய இடங்களில் உள்ள குடியிருப்புகளின் உரிமையாளர்களுக்கு இனிவரும் காலங்களில் சட்ட விரோதமாக குடிநீர் உறிஞ்சும் மின் மோட்டார்களை பயன்படுத்தக் கூடாது.

மீறுவோரின் மீது உரிய சட்ட விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



# இந்து சமய அறநிலைய துறை தனித் துறையாக உதயம்

சென்னை, செப்.10-

தமிழகத்தில் கோயில் நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில், இந்து சமய அறநிலையத் துறையை தனித் துறையாக உருவாக்கி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

கடந்த திமுக ஆட்சியில் இத்துறை, 'சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை' என்ற கூட்டுத் துறையின்கீழ் ஒரு பிரிவாக செயல்பட்டு வந்தது. புதிய ஆட்சி அமைந்ததும், வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் கீழ் அறநிலையத்துறை இணைக்கப்பட்டது.

இந்நிலையில், தற்போது நிர்வாக வசதிக்காகவும், பணிகளை துரிதப்படுத்தவும், இது தனித் துறையாக மாற்றப்பட்டுள்ளது. இதற்கான அரசாணையை தமிழக தலைமைச் செயலர் எம். சாய் குமார் வெளியிட்டுள்ளார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலராக உள்ள வி. ராஜாராமனிடம் கூடுதல் பொறுப்பாக அறநிலையத்துறை வழங்கப்பட்டுள்ளது.

இந்த புதிய துறை உருவாக்கத்துக்கு ஏற்ப, 'தமிழ்நாடு அரசு வணிக விதிகள் 1978'-ல் உரிய மாற்றங்கள் விரைவில் செய்யப்பட உள்ளன. இதற்கான நடவடிக்கைகளை மனிதவள மேலாண்மைத் துறை மேற்கொள்ளும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாய் மாமன் தங்க மோதிரம் திட்டம் தள்ளிப்போகிறது" அமைச்சர் அருண்ராஜ் தகவல்

சென்னை, செப்.10-

செப்.15-ம் தேதி தொடங்கவிருந்த தாய் மாமன் தங்க மோதிரம் திட்டம் முதல்வரின் வெளிநாட்டுப் பயணத்தால் தள்ளிப்போவதாக சுகாதாரத் துறை அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் டி.ராஜா அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரை நேரில் சந்தித்து நலம் விசாரித்த அமைச்சர் அருண்ராஜ் பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவரிடம் செய்தியாளர்கள் தாய் மாமன் தங்க மோதிரம் திட்டம் பற்றி கேள்வி எழுப்பியபோது, "நீங்கள் நினைப்பதுபோல், தாய் மாமன் தங்க மோதிரம் திட்டம் தள்ளிப்போகிறது. முதல்வரின் வெளிநாட்டுப் பயணம் காரணமாக தாய் மாமன் தங்க மோதிரம் திட்டம் தொடங்குவது தள்ளிப்போகிறது. நீங்கள் ஊகிப்பதுபோல் உசிலம்பட்டியில் தான் அத்திட்டம் தொடங்கப்படும். இதுதொடர்பான



அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடுவோம்," என்றார்.

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு, ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும் என்று தவெக அறிவித்திருந்தது.

அதன்படி, 'தாய் மாமன் தங்க மோதிரம்' திட்டத்தை, மறைந்த முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்த நாளான செப்.15-ம் தேதி முதல்வர் விஜய் தொடங்கி வைப்பார். இந்தத் திட்டத்துக்காக ஆண்டுதோறும் ரூ.755.83 கோடி நிதி ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த திட்டம் தொடங்கி வைக்கப்படும் தேதி மாற்றப்பட்டுள்ளதாகவும், செப். 25-ம் தேதி மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் முதல்வர் விஜய், தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்தைத் தொடங்கி வைக்க உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் அதை உறுதிப்படுத்தும் வகையில் அமைச்சர் அருண்ராஜ் பேட்டியளித்துள்ளார்.

**தங்கத்தில் குறையிருக்காது..**

மேலும் அமைச்சர் பேசுகையில், "தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்தில் வழங்கப்பட உள்ள தங்கத்தில் எவ்வித குறையும் இருக்காது. 916 தங்கம் தானா என முறையாக சோதனை செய்த பின்னரே தங்க மோதிரம் திட்டத்துக்கு தங்கம் அனுப்பப்படும். மோதிரத்தின் தரத்தை பயனாளர்களும் சோதனை செய்து கொள்ளலாம்" என்றார்.

அதேபோல், எலும்பு மஜ்ஜை, ஸ்டெம் செல் தானத்தையும் ஊக்குவித்துப் பேசினார். "நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கு எலும்பு மஜ்ஜை தேவை அதிகளவில் இருப்பதால் எலும்பு மஜ்ஜை (போன் மாரோ - Bone Marrow) தானம் செய்ய முன்வரவேண்டும். ரத்த தானம், கண் தானம்போல் ஸ்டெம்செல் தானத்துக்கான முன்பதிவும் தொடங்கப்பட உள்ளது" என்றார்.

# தமிழக காங்கிரஸ் சமூக ஊடகப் பிரிவு தலைவராக விஜய் வசந்த் நியமனம்

சென்னை, செப்.10-

தமிழக காங்கிரஸ் கட்சியின் சமூக ஊடகப் பிரிவின் தலைவராக விஜய் வசந்த் எம்.பி. நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக காங்கிரஸ் கட்சியின் சமூக ஊடகப் பிரிவுக்கான மாநிலத் தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களை



நியமிக்கும் முன்மொழிவுக்குக் காங்கிரஸ் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்த நியமனங்கள் உடனடியாக அமலுக்கு வருகின்றன. அதன்படி பிரிவின் மாநிலத் தலைவராக விஜய் வசந்த், ஒருங்கிணைப்பாளர்களாக சக்தி மாரிதாசன், ஜி.கே.முரளிதரன், சிவசத்யராஜா குணசேகரன், சஞ்சய் காந்தி, ஜான் சாமுவேல், அப்துல் ரஹ்மான் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்" எனக் கூறப்பட்டுள்ளது.

# திண்டுக்கல் அருகே கைது செய்யச் சென்றபோது காவலரை வெட்டிவிட்டு தப்ப முயன்ற ரவுடி துப்பாக்கியால் சுட்டுப் பிடிப்பு

திண்டுக்கல், செப்.10-

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி அருகேயுள்ள சிக்கனம்பட்டியை சேர்ந்த ரவுடி ராஜாவை கைது செய்யச் சென்றபோது, உதவி ஆய்வாளரை பட்டாக்கத்தியால் வெட்டிவிட்டு தப்ப முயன்றுள்ளார். இதனை கட்டுப்படுத்த காவலர்கள் அவரது காலில் துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தனர். இந்த



துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த ரவுடி ராஜா சிகிச்சைக்காக நிலக்கோட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

# சோழவந்தான் அருகே தேசிய நெடுஞ்சாலையில் கோர விபத்து: மாடுபிடி வீரர்கள் இருவர் உயிரிழப்பு

மதுரை, செப்.10-

சோழவந்தான் அருகே தேசிய நெடுஞ்சாலையில் நேரிட்ட கோர விபத்தில், ஜல்லிக்கட்டு மாடுபிடி வீரர்கள் இருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே, திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் நேரிட்ட விபத்தில் ஜல்லிக்கட்டு மாடுபிடி வீரர்கள் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். சோழவந்தான் அருகே உள்ள சித்தாலங்குடி கிராமத்தைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் மற்றும் ராகுல் ஆகிய



இருவரும் நெருங்கிய நண்பர்கள் ஆவர். சிறந்த ஜல்லிக்கட்டு மாடுபிடி வீரர்களான இவர்கள், பல்வேறு ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் ஒன்றாகப் பங்கேற்று, காளைகளை அடக்கிப் பரிசுகளை வென்றுள்ளனர்.

இந்நிலையில், நேற்று இரவு இவர்கள் இருவரும் மதுரை திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர். அப்போது, நகரி பகுதி அருகே சென்று கொண்டிருந்த போது அவ்வழியாகச் சென்ற அடையாளம் தெரியாத கனரக லாரி ஒன்றிலிருந்து திடீரெனப் பெரிய இரும்பு பொருள் ஒன்று லாரியில் இருந்து கீழே விழுந்து இவர்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது பலமாக மோதியது.

இதில் நிலைதடுமாறி கீழே விழுந்த கோபாலகிருஷ்ணன் மற்றும் ராகுல் இருவரும் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த சோழவந்தான் காவல்துறையினர், இருவரின் உடல்களையும் கைப்பற்றி உடற்கூறாய்வுக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், விபத்தை ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்ற வாகனம் குறித்து வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இணைபிரியா நண்பர்களான ஜல்லிக்கட்டு வீரர்கள் இருவர் ஒரே நேரத்தில் விபத்தில் உயிரிழந்த சம்பவம், சித்தாலங்குடி கிராம மக்களைப் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. உயிரிழந்த இளைஞர்களின் குடும்பத்தினருக்கு அரசு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என அப்பகுதி மக்கள் மற்றும் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# திருச்சி மணப்பாறை அருகே மின்சாரம் தாக்கி இளைஞர் உயிரிழப்பு

திருச்சி, செப்.10-

மணப்பாறை அருகே தண்ணீர் தொட்டியில் குளித்துவிட்டு மின் மோட்டாரை நிறுத்தச் சென்றபோது மின்சாரம் தாக்கி முருகன் (29) என்பவர் உயிரிழந்தார்.

திருச்சி மாவட்டம் மணப்பாறை பகுதியைச் சேர்ந்தவர் முருகன் (வயது 29). இவர் இன்று தனது வீட்டின் அருகே உள்ள தண்ணீர் தொட்டியில் குளித்தார். குளித்து முடித்தவுடன், ஓடிக்கொண்டிருந்த மின் மோட்டாரை நிறுத்துவதற்காக ஈரமான உடலுடன் சுவிட்சைத்



தொட்டுள்ளார்.

அப்போது, எதிர்பாராதவிதமாக முருகன் மீது மின்சாரம் பாய்ந்தது. இதில் தூக்கி வீசப்பட்ட அவர், சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்த குடும்பத்தினர் மற்றும் அக்கம் பக்கத்தினர், உடனடியாக இதுகுறித்து போலீசாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த உள்ளூர் போலீசார், முருகனின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இச்சம்பவம் குறித்து போலீசார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். குளித்துவிட்டு மின் மோட்டாரை நிறுத்தச் சென்ற வாலிபர் மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் அந்த கிராமத்தில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.





# சிவகங்கை விளையாட்டு மைதானத்தில் 'CM Trophy' போட்டிகள்

சிவகங்கை, செப்.10–

சிவகங்கை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் CM Trophy விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன.

கைப்பந்து போட்டியை உடற்கல்வி இயக்குனர் லூயிஸ், உடற்கல்வி ஆசிரியர் மூர்த்தி மற்றும் மாலை தந்தி நாளிதழ் நிறுவனர் பொன்ராஜ் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

கைப்பந்து போட்டியில் மொத்தம் 21 அணிகள் கலந்து கொண்டு விளையாடின. மேலும் கூடைப்பந்து, வலைப்பந்து, கையுந்துபந்து உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகளும் நடைபெற்றன.



# காளையார்கோவில் வடக்கு, தெற்கு, கிழக்கு ஒன்றிய தி.மு.,கழக மறுசீரமைப்பு கூட்டம்

சிவகங்கை, செப்.10–

காளையார்கோவில் வடக்கு, தெற்கு, கிழக்கு ஒன்றிய திமுகழக மறுசீரமைப்பு கூட்டம் வே. ஆரோக்கியசாமி , ஆர்.எம். கென்னடி, யோக. கிருஷ்ணகுமார் தலைமை...

திமுக தலைமையின் முன்னெடுப்பான கழக மறுசீரமைப்பை செய்து வருகிறது...

அதனடிப்படையில் , சிவகங்கை மாவட்ட திமுக செயலாளர், மேனாள் அமைச்சர் கேஆர். பெரியகருப்பனின் ஆலோசனையின் பேரில் மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றிய, நகர, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள் மறுசீரமைப்பு செய்யப்படுகிறது...

அதன்படி காளையார்கோவில் வட்டத்தில் உள்ள மூன்று ஒன்றியங்களான கிழக்கு, வடக்கு, தெற்கு ஆகிய ஒன்றியங்களுக்கான கிளைக்கழக செயலாளர்கள் மறுசீரமைப்பு கூட்டமானது நடைபெற்றது...

காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய செயலாளர் யூனியன் மேனாள் சேர்மன் வே. ஆரோக்கியசாமி , வடக்கு ஆர். எம். கென்னடி , தெற்கு ஒன்றிய செயலாளர் யோக. கிருஷ்ணகுமார் ஆகியோரது தலைமையில் நடைபெற்றது...

இந்த கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய , கிளைக்கழக நிர்வாகிகள் என ஏராள மானோர் கலந்து கொண்டனர்.



# கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தின விழா

கல்லல், செப்.10–

சிவகங்கை மாவட்டம் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு பள்ளித் தலைமையாசிரியர் அழகப்பன் தலைமை தாங்கினார்.

அரியக்குடி அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பிரிட்டோ மற்றும் பெரியகோட்டை அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் கண்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இவ்விருவரும் இந்த ஆண்டு மாநில நல்லாசிரியர் விருது பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறப்பு விருந்தினர்கள் மாணவ, மாணவிகளின் உயர்விற்கு கல்வியின் அவசியம், பள்ளிகளின் பங்கு மற்றும் ஆசிரியர்களின் முக்கியத்துவம் குறித்து எடுத்து ரைத்து மாணவர்களுக்கு உற்சாகம் அளித்தனர்.

காளீஸ்வரி வரவேற்புரை வழங்கினார். கலைத் திருவிழா நிகழ்ச்சிகளில் சிறப்பாக செயல்பட்ட மாணவ, மாணவிகள் தங்களது கலைத்திறமைகளை வெளிப்படுத்தினர். மாணவிகள் எழுப்பிய கேள்விகளுக்கு ஆசிரியர்கள் பதிலளித்தனர்.

ராம் ஸ்ரீ, பிரந்திந்ரா தேவி ஆகியோர் ஆசிரியர் தின உரையாற்றினர். சுபஸ்ரீ, நந்தேஸ்வரி, அக்ஷயா ஆகியோர் கவிதை வாசித்தனர். ஆசிரியர் சாத்தையா நன்றியுரை வழங்கினார்.

லாவண்யா மற்றும் திரிஷா நிகழ்ச்சி யை தொகுத்து வழங்கினர். ஆசிரியர் பிரபு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்து ஒருங்கிணைத்தார்.





# சேம்பார் நடுநிலைப் பள்ளியில் 'மகிழ் முற்றம்' நிகழ்ச்சி: நெய்தல் அணி முதலிடம்

காளையார்கோவில், செப்.10–

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியம் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 'மகிழ் முற்றம்' நிகழ்ச்சி பள்ளித் தலைமை ஆசிரியர் சுரேஷ் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.



மாணவர்களின் திறன், வருகைப்பதிவு, கலைத் திருவிழா போட்டிகள், கற்றல் திறன், மன்ற செயல்பாடுகள், விளையாட்டு விழா, வானவில் மன்ற செயல்பாடுகள் மற்றும் ஆண்டு விழா போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மதிப்பெண்களின் அடிப்படையில் அணிகள் தேர்வு செய்யப்பட்டன.

இதில் நெய்தல் அணி முதலிடத்தை பிடித்தது. குறிஞ்சி மற்றும் பாலை அணிகள் இரண்டாம் இடத்தையும், மருதம் மற்றும் முல்லை அணிகள் முறையே மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களையும் பெற்றன.

முதலிடம் பெற்ற நெய்தல் அணிக்கு சுழற்கோப்பை மற்றும் ஊக்கப் பரிசு வழங்கப்பட்டது. அணியின் தலைவர் அருள் ஜோஸ்வின், துணைத் தலைவர் கவி கிஷோர், பொறுப்பாசிரியர் முத்துக்குமார் ஆகியோர் சுழற்கோப்பையை பெற்றுக் கொண்டனர்.

முன்னதாக நெய்தல் அணியின் தலைவர் அருள் ஜோஸ்வின் கொடியேற்றி சிறப்புரையாற்றினார். தலைமை ஆசிரியர் சுரேஷ் பேசுகையில், மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துதல், சம வாய்ப்புகள் வழங்குதல், தலைமைத்துவ பண்புகளை வளர்த்தல் மற்றும் ஆசிரியர்மாணவர் உறவை வலுப்படுத்துதல் ஆகியவையே மகிழ் முற்றத்தின் நோக்கங்கள் என தெரிவித்தார்.

கலைத் திருவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன.

முடிவில் பட்டதாரி ஆசிரியர் காளீஸ்வரன் நன்றியுரை கூறினார். நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், சத்துணவு மற்றும் காலைச் சிற்றுண்டிப் பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தி.மு.க.,வில் மீண்டும் இணைந்த பரிதா நவாப்

கிருஷ்ணகிரி, செப்.10–



கிருஷ்ணகிரி முன்னாள் நகர் மன்றத் தலைவர் பரிதா நவாப் மற்றும் திமுக முன்னாள் நகரச் செயலாளர் நவாப் ஆகியோர் இன்று திமுக தலைவர் மற்றும் முன்னாள் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் மீண்டும் திமுகவில் இணைந்தனர்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மு.க.ஸ்டாலின் முன்னிலையில் இருவரும் தங்களை மீண்டும் திமுகவில் இணைத்துக் கொண்டனர். நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் எம்எல்ஏவுமான மதியழகன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

இதற்கு முன்பு பரிதா நவாப் திமுகவில் இருந்து விலகி அதிமுகவில் இணைந்ததுடன், அக்கட்சியின் மாநில இணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது மீண்டும் திமுகவில் இணைந்துள்ள அவரது வருகை, கிருஷ்ணகிரி மாவட்ட அரசியல் வட்டாரத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.



■ நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில், வங்கியாளர்கள் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சதானந்த் கல்கி உட்பட பலர் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப்பள்ளியில், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி துறை சார்பில் 1 முதல் 8ம் வகுப்பு மாணவர்களுக்கான வட்டார அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் நடைபெற்றன.கிருஷ்ணகிரி ஒன்றியத்தில் குறுவள மைய அளவில் முதலிடம் பெற்ற 1,050 மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.களிமண் சிற்பம், நடனம், கதை, பாட்டு, ஓவியம், ஒப்புவித்தல் உள்ளிட்ட போட்டிகள் நடைபெற்றன.வட்டார அளவில் முதலிடம் பெறும் மாணவர்கள் மாவட்ட அளவிலான போட்டியில் பங்கேற்க உள்ளனர்.




# கிருஷ்ணகிரியில் ஓய்வூதியர் சங்கம் ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரி, செப்.10–

கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கம் சார்பில் காசில்லா மருத்துவத்தை முழுமையாக அமல்படுத்தக் கோரி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 100% காசில்லா மருத்துவம், மருத்துவ காப்பீட்டு குறைபாடுகள் நீக்கம், அடையாள அட்டை உடனடி வழங்கல் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட தலைவர் துரை தலைமையில் ஓய்வூதியர்கள் திரளாக பங்கேற்று கண்டன கோஷங்களை எழுப்பினர்.



பல்லாவரம் மலங்கானந்தபுரம் பகுதியில் அமைந்துள்ள

# புனித ஆரோக்கிய அன்னை குருசடியின் ஆறாம் ஆண்டு தேர் திருவிழா

## வெகு விமர்சையாக நடைபெற்றது

பல்லாவரம், செப்.10–

செங்கல்பட்டு மாவட்டம் ஜமின் பல்லாவரம் மலங்கானந்தபுரம் பகுதியில் அமைந்துள்ள, புனித ஆரோக்கிய அன்னை குருசடியின் ஆறாம் ஆண்டு தேர் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது. விழாவினை முன்னிட்டு அன்னையின் திருக்கோடி ஏற்றப்பட்டு தொடர்ந்து மூன்று நாட்கள் ஜெப வழிபாடும் அன்னதான நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. திருவிழா நாளன்று ஆரோக்கிய அன்னையின் திருவுருவ சுரூபம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, பேண்டு வாத்தியங்களின் இசையுடன் அப்பகுதியின் முக்கிய வீதிகளில் பவனியாக வலம் வந்தது. கானா சுதாகர் மாதா பாடல்களை இன்னிசையுடன் பாடிவர, அன்னையின் பக்தர்கள் ஜெபமாலை ஜெபித்தபடி பக்தியுடன் கலந்து கொண்டனர். செல்லும் வழியெங்கும் மக்கள் மெழுகுவர்த்தி ஏந்தியும், சாம்பிராணி தூபமிட்டும், புடவைகள் சாத்தியும், மலர் மாலைகள் அணிவித்தும், ஆரோக்கிய அன்னையை வழிபட்டனர். விழா நிகழ்வுகளில் மாமன்ற உறுப்பினர் டி.வி.ராஜா, பூங்கோதை ராஜா, பல்லாவரம் உதயகுமார், நந்தகுமார், பல்லாவரம் கௌதம், பல்லாவரம் ராதாம்மாள், அண்ணா துரை, ரவி, குன்றத்தூர் சுரேஷ் ஆகிய உபயதாரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்த இதில் விழா குழுவினர், அன்னை தெரசா அறக்கட்டளையினர், மற்றும் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161